பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6=00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 16 புதன்கிழமை (28-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 94

திருமலை நகரில் இருந்த

## ஐ. நா. அகதி முகாமை படையினர் மூடினர்!

கொழும்பு, பெப். 28

திருகோணமலை நகரில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் நடத்தப்பட்டு வந்த அகதி முகாம் இராணுவத்தினரால் மூடப்பட்டதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை அந்த முகாமுக்கு சென்ற இராணுவத்தினர், அங்கிருந்தவர்களை பலாத்காரமாக டிரக் வண்டியில் ஏற்றி அவர்களை குச்சவெளி, நிலாவெளிப் பகுதிக்கு கொண்டுபோய் விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குச்சவெளி, நிலாவெளிப் பகுதியில் இருந்து வெளியேறியவர்களும்; இந்தியாவுக்கு சென்று திரும்பியவர்களுமாக சுமார் 500 பேர் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்த அந்த முகாமில் தங்கி இருந்தனர். (இ-3-6)

# புலிகளுடன் பேசுமாறு அரசாங்கத்துக்கு அழைப்பு

## நோர்வேயில் நடந்த கருத்தரங்கில்

மணிலா, பெப். 28

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துமாறு —

நோர்வேயில் நடைபெற்ற இனப் பிரச்சினை தொடர்பான கருத்தரங்கில் —

ஸ்ரீலங்கா அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக — வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இதே வேளை —

பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இரண்டு தரப்பாரும் உடன்பட்டால் அதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வத்தளையில் 13 தமிழர்கள் கைது

கொழும்பு, பெப். 28

வத்தளைப் பொலீஸ் பகுதியில் உள்ள வெலமுன என்ற இடத்தில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கடந்த சனிக்கிழமை கூட்டாக சுற்றிவளைப்பு, தேடுதல் நடத்தி—

பதின்மூன்று தமிழர்களைக் கைது செய்தனர். இவர்களில் மூவர் பெண்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவரிடம் இருந்து ரிவோல்வருக்குரிய ரவையும், இராணுவச் சீருடையை ஒத்த ரி சேர்ட்டும் கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் அறிவித்தனர். (அ)

# குமரபுரம் படுகொலைகள்: படையினர் முழுப்பொறுப்பு!

## இராணுவ நீதிமன்றம் அறிக்கை

கொழும்பு, பெப்ரவரி 28

**கடந்த 11 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம்—மூதூர் பிரதேசம்—கிளிவெட்டிப் பகுதியில் உள்ள குமரபுரத்தில் 24 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு இராணுவத்தினரே பொறுப்பு என இப்படுகொலைச் சம்பவம் குறித்து விசாரித்த இராணுவ விசாரணை மன்றம் தெரிவித்திருக்கின்றது.**

அன்றைய தினம் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் அப்பாவித் தமிழர்கள் 24 பேர் படுகொலை செய்யப்பட்டதும், 28 பேர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

இந்தச் சம்பவம் குறித்து (4ஆம் பக்கம் பார்க்க)

## மற்றும் ஒரு சடலம் கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 28

கொழும்பு மத்திய வங்கியின் இடிபாடுகளிடையே இருந்து மேலும் ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வங்கி பாதுகாப்பு அதிகாரியின் சடலமே கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# வடக்கே வருவோர் 48 மணி நேரம் வவுனியாவில் தடுத்து வைக்கப்படுவர்

## திங்கள் முதல் புதிய சட்டம் அமுல்

வட பகுதியிலிருந்து கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குச் செல்வோர், வவுனியாவில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போன்று—

கொழும்பு, தென்பகுதிகளிலிருந்து வடக்கு நோக்கி வருவோரும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவர்.

இந்தப் புதிய நடைமுறை கடந்த திங்கட்கிழமையிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வட பகுதிக்கு வருபவர்கள் வவுனியாவில் 48 மணிநேரம் தடுத்து வைக்கப்படுவார்கள் என பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ-7)

## 3 படையினர் 2 ஊர்காவலர் மணலாறு மோதலில் காயம்

கொழும்பு, பெப். 28

மணலாறு அத்தாவக்குனு வெலப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலின் போது 3 இராணுவத்தினரும் 2 ஊர்காவலர்களும் காயமடைந்ததாகவும் —

இடையில் அகப்பட்ட பொது மகன் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் - பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

காயமடைந்த படையினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-6-7)

## சிலாவத்துறைப் பகுதியில் புலிகள் ஆயுதக் கடத்தலாம்

கொழும்பு, பெப். 28

நிலத்தில் தமது பாதுகாப்பு நடவடிக்கைளை படையினர் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து தென்னிலங்கைக்கு வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களைக் கடத்தும் நடவடிக்கைகளுக்கு கல்பிட்டிக்கு நெருக்கமாக உள்ள சிலாபத்துறை அரிப்பு பகுதிகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றார்கள்.

அண்மையில் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் இவ்வாறு தெரிவிப்பதாக (4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. முழு அளவில் திருத்தம்

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசின் சட்ட ஆவணத்துக்கு முழு அளவிலான திருத்தத்தை ஐ.தே.க சமர்ப்பிக்க உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

## எல்லாளன் படையுடன் புலிகள் தொடர்பில்லை

லண்டன், பெப். 28

எல்லாளன் படைக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள எந்த வெளிநாட்டுத் தூதரகத்துக்கோ உலகில் மற்றப் பகுதிகளில் உள்ள தூதரகங்களுக்கோ தாம் ஒருபோதும் எந்தவித அச்சுறுத்தலையும் விடுத்ததில்லை என்றும் —

எதிர்காலத்திலும் அத்தகைய அச்சுறுத்தல்களை விடுதலைப்புலிகள் விடுக்க மாட்டார்கள் எனவும் — விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பகம் நேற்று லண்டனில் விடுத்த அறிக்கையில் தெரிவித்தது. (இ-3)

# 150 குடும்பங்களில் 10 பேர் மட்டுமே வலிகாமம் செல்வதற்கு இணங்கினர்

## அரசுக்குப் பெரும் தோல்வி

கொழும்பு, பெப். 28

அரசாங்கம் எவ்வளவோ கடுமையான பிரயத்தனங்களின் பின்னர், 150 குடும்பங்களை வவுனியாவில் இருந்து வலிகாமத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் மிகச் சிறு எண்ணிக்கையினரான பத்துப்பேர் மாத்திரமே வலிகாமம் செல்ல இணங்கினர். அப்படி இணங்கியவர்களிலும் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கவில்லை. தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களே அவர்கள்.

'சண்டே ரைம்ஸ்' பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா விமானப்படையின் 'வை 12' ரக விமானத்தில் இவர்கள் வவுனியாவில் இருந்து [illegible] செல்லப்பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போரில் 60 சதவீதத்தை அரசு வென்றுவிட்டது

### அனுருத்த சொல்கிறார்

கொழும்பு, பெப். 28

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசு 60 சதவீதத்தை வென்றுவிட்டது.

இன்னும் எஞ்சியுள்ள 40 சதவீதமும் இந்து - சிங்கள புதுவருடத்திற்கு முன்னர் வெல்லப்பட்டுவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

உடுநுவர தேர்தல் தொகுதியில் உள்ள தலுகல பொலீஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கட்டில் [ஒற்றை], Ceyesta மெத்தை, சுவர்மணிக்கூடுகள், Oven, கமரா, மைக்ரோ கசட் றெக்கோடர் (Sony), Sumit Liguidizer, Lumala பெண்களுக்கான சைக்கிள், கறுப்பு வெள்ளை T. V., டைப்ரைட்டர்கள் (ஆங்கிலம்), ஸ்டீரியோ கசட் றெக்கோடர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. நாகேந்திரன், கந்தசுவாமி கோவிலடி, கெருடாவில், சாவகச்சேரி. (40839)

உடுப்பிட்டி வீரபத்திர கோவிலடியில் ஒரு பரப்புக் காணியுடன் சிறிய வீடும், சாளி மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. R. குருக்கள், பாபு கோணேசன் வீதி, நுணாவில். (40842)

அவரி (Avery) 250 கிலோ மேடைத் தராசு விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. சந்திரகுமார், குமாரவேலு மருந்தகம், பழைய பஸ் நிலையம், பருத்தித்துறை. (49309)

### தவறிவிட்டது

தம்பிரத்தினம் தயாளகுமார் ஆகிய எனது 690810034V இலக்கமுடைய அடையாள அட்டை 25-2-96 அன்று மரக்கறி சந்தைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 102, மே/பா உதயன் கிளை, பருத்தித்துறையில் ஒப்படைத்து உதவவும். (40311)

26-02-96 ஆம் திகதி மாலை 6 மணியளவில் மீசாலைக்கும் மிருசுவிலுக்கும் இடையில் 'லைபிரரி' (கிளிநொச்சி) புத்தகங்கள் பதிவு செய்யப்பட்ட கொப்பி ஒன்றும் இரண்டு படங்களும் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் பளை பிரதேசசபை ''லைபிரரி''யில் ஒப்படைக்கவும். (40873)

### L. M. L. பஜாஜ் உதிரிகள்

பழைய, புதிய வெஸ்பா பஜாஜ் உதிரிகளைப் பெற்றுக்கொள்ளவும், அவற்றைத் திருத்திக்கொள்ளவும் ஷண் மோட்டோஸ், ஹப்பி துணியகம் அருகாமையில், யாழ். வீதி, கிளிநொச்சி, (மானிப்பாய் வீதி - பாபு) கிளை: கண்டி வீதி, மீசாலை. (சி-4067)

### ENGLISH FOR EXAMS

G.A.Q. (Peradeniya), A/L Sat O/L 96, Spoken English for Those Foreign Countries Quick Results produced by B.Sc. (Cey) Teacher C/o. Saravanmuthu, Kamalachi, Vethavanapilliyar Kovil Lane, Kalvayal, Chava kachcheri. (40872)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், வீவ (பிளாஸ்டிக் மூடியுடன்), பியர், நெல்லிக்கிறஷ், ஜாம், கோடியல் போத்தல்களை பருத்தித்துறையில் உள்ள வேலவன் ஸ்ரோர்ஸ், ரதி ஸ்ரோர்ஸ், தீன்சுவை, செல்வராஜா ஸ்ரோர்ஸ், குட்டி ஸ்ரோஸ் மற்றும் மந்திகையில் உள்ள தேன்சோலையில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ்லைன் இன்டஸ்றீஸ் (தனி) வரை. [சி-4004]

## இடமாற்றம்

### வி. எஸ். பி. குறூப்
### V. S. B. GROUP

275, 277, அர்ச்சுனா சாலையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது 176,கண்டி வீதி (R.P.N. மில் உட்புறம்) சாவகச்சேரியிலும், கிளை பிரதான வீதி, நெல்லியடியிலும் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

பங்காளர்கள்
வி. எஸ், பி. குறூப்

(40871)

## உடன் சந்திக்கவும்

இல. 31/2, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை பூமணி அவர்களை France இல் இருந்து வந்துள்ள ஆனந்தன் உடன் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறார்.

முகவரி:
ஆனந்தன்
கப்டன் நகுலன் இல்லம்,
நகுலன் வீதி, மீசாலை வடக்கு.

(40877)

## உடன் சந்திக்கவும்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது மட்டுவில் ஐயர் வளவில் வசிப்பவருமாகிய திருமதி பத்மாவதி தர்மலிங்கம் அவர்களை FRANCE இல் இருந்து வந்துள்ள ஆனந்தன் உடன் சந்திக்குமாறு வேண்டுகிறார்.

முகவரி:
ஆனந்தன்,
கப்டன் நகுலன் இல்லம்,
நகுலன் வீதி, மீசாலை வடக்கு

(40876)

## சாவகச்சேரி நகரசபை

# 1996 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

**15 – 03 – 1996** தொடக்கம் **31 – 12 – 1996** வரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் **12 – 03 – 1996** ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. ஆட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 1 | ரூ. 5 5,000/- | 1,000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 08 - 03 - 96 ஆம் திகதி 12.30 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாக செலுத்தப்படல்வேண்டும். இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
27 - 2 -96.

(சி/2981)

# தெற்கு பாடசாலைகளில் பாதுகாப்புப் பிரச்சினை

காலிப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளுக்கு புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டதாகவும்– அக் கடிதத்தில் கடந்த 14 ஆம் திகதிக்கும் 17 ஆம் திகதிக்கும் இடையில் பாடசாலை மீது தாக்குதல் நடத்தப்போவதாக மிரட்டப்பட்டிருந்தாதகவும் அண்மையில் தென் மாகாணசபை முதலமைச்சர்கள் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக இக்கூட்டம் கூட்டப்பட்டது.

புலிச் சின்ன அடையாளத்தை வேறு சஞ்சிகையில் இருந்து வெட்டி எடுத்து இக் கடிதங்களில் ஒட்டி விஷமிகள் அனுப்பியிருக்கலாம் என அங்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

பாடசாலைளை ஆரம்பிக்க முன்னர் சகல வகுப்புக்களையும் விஞ்ஞான ஆய்வுகூடங்களையும்பரிசோதனை செய்ய வேண்டும் என்றும்—

அறிமுகமில்லாத மாணவர்களோ, அல்லது நபர்களோ பாடசாலை வளவில் இருக்கிறார்களா என்பதை அவதானிக்க வேண்டும் என்றும்—

பாடசாலைக்கு அருகே எந்த ஒரு வாகனமும் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்றும்—

பாடசாலை விட்ட பின்னர் பிள்ளைகளை சிறு சிறு குழுவினராக அனுப்பவேண்டும் என்றும்— முடிவுகள் எடுக்கப்பட்டன. (இ-3)

## சித்த மருத்துவ பரீட்சை முடிவு

கடந்த மாதம் யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட இறுதி வருட (5 ஆம் வருடம்) சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி (பீ. எஸ். எம். எஸ்.) பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு;-

2 ஆம் வகுப்பு
*மேல் பிரிவு சித்தி*

செல்வி அ. அன்புச்செல்வி, செல்வி ஆர். சுமங்களாதேவி.

2 ஆம் வகுப்பு
*கீழ்ப் பிரிவு சித்தி*

செல்வி த. விஜிதா, த. திலீபன், செல்வி கி. கிருஷ்ண கௌரி.

*சாதாரண சித்தி*

வெ. சக்திவேல், செல்வி நா. சந்திரா, கா. நடேசராசன், அ. தத்துவசுதன், செல்வி வானதி. சி. ராஜ்குமார். (இ-3)

## உள்ளூராட்சி ஓய்வூதியம்

உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களுக்கான 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத வவுச்சர்களும், காசோலைகளும் நேரடியாக அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

எனவே உள்ளூராட்சி ஓய்வூதியர்கள், தத்தமது வங்கிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-7)

## இடமாற்றம்

இதுவரை காலமும் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் இயங்கி வந்த வைத்திய நிலையம், நோயாளரின் நலன் கருதி

இன்று முதல் 28-2-96 சாவகச்சேரி பேருந்து நிலையம் அருகில் இயங்கும்

என்பதை அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- உதவி வைத்தியர் (R.M.P) தேவை. விண்ணப்பிக்கவும்.

டாக்டர் சிவானந்தராஜா
M.B.B.S. (Cey.)

(40879)

## யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி

இக் கல்லூரியில் 30 வருடங்களுக்கு மேல் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக சேவையாற்றி **24- 10- 1995** இல் ஓய்வு பெற்ற அதிபர்

உயர்திரு
**மு. பரமேஸ்வரன்** B.A., S.L.P.S.I

அவர்களை கௌரவித்து ஆசிரியர் கழகம் எடுக்கும்
''சேவை நலன் பாராட்டலும்
பிரிவுபசார விழாவும்''
மதிய போசன விருந்துடன் இன்று 28- 02- 96 (புதன்) நடைபெறும்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர்கள்

'இந்திரபதி'
கச்சாய் வீதி,
கொடிகாமம்,
28- 02- 96

(40844)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் விக்கினேஸ்வரக்குருக்கள்

(ஆதீனகர்த்தாவும், பிரதம குருவும், நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீவெய்யிலுகந்தவிநாயகர் தேவஸ்தானம்)

அன்னாரின் திடீர் மறைவு அவர்தம் குடும்பத்தினர்க்கு மட்டும் அல்லாமல் எமது சைவ உலகிற்கே ஒரு பேர் இழப்பாகும். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறுவதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகில இலங்கை சைவக்குருமார் - அர்ச்சகர் சபை

தலைவர்
சோ. தண்டபாணிகதேசிகர்
(சமாதான நீதிவான்)

(408433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இனத்தோடு சேரும் இனம்!

இனப்பிரச்சினைக்குரிய தீர்வாகத் தாம் தயாரித்துள்ள அதிகாரப் பரவல் திட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் சந்திரிகா மிகுந்த கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

அதனாலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சு நடத்தி அவரது கட்சி எம். பிக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒருதரப்பு முனையும் போது, அடுத்த கட்சி அதற்கு எதிராகப் பிரசாரம் செய்து குழப்பி விடுவது, ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி அரங்கேற்றும் அரசியல் கண்ணாமூச்சி விளையாட்டாகும்.

அந்த விளையாட்டை இம்முறை ஐக்கிய தேசியக்கட்சி ஆடாமல் தடுத்து விட வேண்டும் என்பதற்காகவே சந்திரிகா ரணிலுடன் சந்திப்புகளையும் பேச்சுக்களையும் நடத்துகிறார்.

சந்திரிகாவின் தீர்வு தமிழர்களின் தாயகம், தன்னாட்சி அபிலாசைகளைப் புறக்கணித்து வகுக்கப்பட்டது என்பதால் சந்திரிகாவும் ரணிலும் சேர்ந்து அதனை நிறைவேற்றினாலும் அது தமிழர்களுக்கு எந்தவித விமோசனமும் தரமாட்டாது.

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு, அதிகாரப் பரவல் அலகு, அதன் எண்ணிக்கை, எல்லை வரையறை ஆகியன குறித்து எதுவுமே தெரிவிக்காமல் —

அவற்றைத் தெரிவுக் குழுவே தீர்மானிக்கட்டும் என்று பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டமை சந்திரிகாவின் கள்ளத்தனத்தையும், குள்ளக் குணத்தையும் காட்டியது.

வடக்கு - கிழக்கைப் பிரித்துத் துண்டாக்குவதில் இரு கட்சிகளும் கைகோர்த்துச் செயற்படப் போகின்றன என்பது இப்போது வெளிப்பட்டுள்ளது. மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக் குழுவின் நிலைக்கே சந்திரிகா அரசின் தீர்வும் நகர்கிறது; அதனை நோக்கியே செல்லப் போகிறது.

மங்கள முனசிங்கா தெரிவுக் குழு இது விடயத்தில் மூக்கை நேராகத் தொட்டது; சந்திரிகா அரசு தலையைச் சுற்றித் தொடுகிறது. அவ்வளவு தான் வித்தியாசம்.

வடக்கு-கிழக்கை இணைத்து தமிழர் தாயகத்தை அங்கீகரிக்கும் எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது என்பதிலேயே இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் கருத்து ஒற்றுமை காணப்படும்; இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அல்ல!

ஸ்ரீ. ல. சு. கட்சியாயினும் சரி, ஐ. தே. கட்சியாயினும் சரி, சிங்கள ஏகாதிபத்திய கொள்கையைக் கைவிடப் போவதில்லை. இனம் இனத்தோடு சேரும். தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கக்கூடாது என்பதில் சிங்களத் தலைவர்கள் எல்லோருமே அண்ணன், தம்பிகளே! ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக அரசியல் போட்டி போட்டாலும், தமிழர் விவகாரம் என்றதும் ஓரணியில் சேர்ந்து விடுவார்கள்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் போராடியே மீள்விக்கவேண்டும் என்பதே மீண்டும் மீண்டும் உணர்த்தப்படுகிறது.

# பல்கலைக்கழக அனுமதி; கடிதங்கள் அனுப்பப்படும்

## இந்த வார இறுதிக்குள்

கொழும்பு, பெப், 28

1994 ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து 1995/96 கல்வி யாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றவர்களுக்கான கடிதங்கள் இவ்வார இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

10 பல்கலைக்கழகங்களுக்கும் 9 ஆயிரத்து 600 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்—

இவர்களுக்கான ஆங்கில பொதுப் பயிற்சி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும்—

சகல பல்கலைக்கழகங்களிலும் விரிவுரைகள் ஜூன் மாதம் ஆரம்பமாகும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழக கட்டடக் கலை அளவீட்டுப் பீடங்களின் விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன என்றும் அவர் தெரிவித்தார் என இலங்கை வானொலி தெரிவித்தது.

(இ-3)

# ஓய்வூதிய வவுச்சர்கள் பெறவேண்டிய இடங்கள்

ஓய்வூதியர்களின் ஜனவரி மாதத்துக்குரிய வவுச்சர்களும், காசோலைகளும் யாழ். செயலகத்தால் நேற்று அனுப்பப்பட்டுள்ளன.

ஓய்வூதியர்கள் தமது வவுச்சர்களை பெற வேண்டிய இடங்கள் குறித்த விபரத்தை யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. சு. சிவபாலன் வெளியிட்டுள்ளார்.

விவரம் வருமாறு :-

★ கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோர்களது ஓய்வூதிய வவுச்சர்கள், காசோலைகள் அந்தந்த கிராமிய வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

★ ஊர்காவற்றுறை மக்கள் வங்கி, இலங்கை வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள், காசோலைகள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★ கிராமிய வங்கி தவிர்ந்த ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்புவதற்காக அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

★ வடமராட்சி, தென்மராட்சியில் வசிப்பவர்களுக்கு வழமையான தபால் விநியோகம் மூலம் ஓய்வூதிய வவுச்சர்கள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்.

★ வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த ஓய்வூதியர்கள், தற்பொழுது நடைமுறையில் உள்ள தபால் விநியோக நடைமுறைப்படி தமது தபாற்கந்தோருடன் தொடர்புகொண்டு தமது ஓய்வூதிய வவுச்சர்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ சகல ஓய்வூதியர்களும் தமது ஓய்வூதிய வவுச்சர்களை வங்கியில் சமர்ப்பித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம். (இ-3)

# விரைவில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

கொழும்பு, பெப். 28

1994 ஆண்டு நடந்த ஆங்கில ஆசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப்பரீட்சையில் சித்தி அடைந்தோரில் ஆயிரத்து 500 பேருக்கு இருவாரங்களில் நியமனம் வழங்கப்படவிருப்பதாக கல்விச் சேவைகள் குழு தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல்கள் அடுத்த வாரம் மாகாண சபைகளிடம் வழங்கப்படும் என்றும் —

வெற்றிடங்களைப் பொறுத்து மாகாணசபை நியமனங்களை வழங்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# வங்கியாளர் பரீட்சை

கொழும்பு, பெப். 28

இலங்கை வங்கியாளர் நிலையத்தின் ஜூன் மாதத்துக்கான இடைக்கால இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(இ-3)

# மட்டக்களப்பில் ஷெல் வீச்சு; மக்கள் இடம் பெயர்வு

மட்டக்களப்பு, பெப். 28

மட்டக்களப்பு கிண்ணையடியை நோக்கி, காகித ஆலை ராணுவ முகாம், புலிபாய்ந்த கல் ராணுவ முகாம் ஆகியவற்றில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அகோர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பல வீடுகள் சேதமடைந்தன. கிண்ணையடி பிள்ளையார் கோவில் முன் மண்டபமும் சேதமடைந்தது.

ஷெல் தாக்குதல் காரணமாக கிண்ணியடி, சுங்காண்கேணி பகுதிகளில் இருந்து 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து வாழைச்சேனை, கறுவாக்கேணி பகுதிகளுக்கு சென்றுள்ளார்.

மரநிழலிலும், வீதி ஓரங்களிலும் அவர்கள் தங்கியுள்ளனர்.

(இ-3)

# சோதனைக் கெடுபிடிகள் கொழும்பில் உச்சக்கட்டம்

கொழும்பு, பெப். 28

கொழும்பில் சோதனைக் கெடுபிடிகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதிக்கு வீதி, ஒழுங்கைக்கு ஒழுங்கை பொலீஸாரும், இராணுவத்தினரும் நின்று போவோர், வருவோரின் தேசிய அடையாள அட்டைகளை பரிசோதிக்கின்றனர்.

வடக்கு—கிழக்கு தமிழர் என்றால் ஓரத்தில் நிறுத்தி விசாரிக்கிறார்கள். பொலீஸ் பதிவுகளை கோருகிறார்கள்.

பொலீஸ் பதிவு இல்லையானால் எத்தகைய வயதினராய் இருந்தாலும் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று ஒப்படைத்து விடுகின்றனர்.

இந்த சோதனை கெடுபிடிகளால் வெளியூரில் இருந்து வரும் தமிழர்கள் பெரும் கஷ்டங்களை அநுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

# நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரியுள்ளது.

★ இராசரட்ணம் ராமச்சந்திரன் — இல 18/07, வைமன் றோட், நல்லூர்.

★ தம்பையா சம்பந்தர் — இராசா வீதி, சந்தி அருகில், கோப்பாய் வடக்கு.

★ சின்னத்தம்பி காசிநாதன்—ரான்ஸ்போமர் வீதி, உரும்பிராய் கிழக்கு.

★ விசிறிற்றம்மா பிரான்சிஸ் அன்னமலர்,— இல 81, பீச்றோட், குருநகர்.

★ ஜெயலட்சுமி பரமதானந்தன் — இல 359 நாவலர் வீதி, நல்லூர்.

★ கனகம்மா பேரம்பலம் — இல 10, 3ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.

★ விஜேந்திராணி தங்கவேலு (வாலா) — இல 114, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை.

★ தயாநிதி பேரின்பராஜன் — அச்சுவேலி வடக்கு.

★ ஆழ்வார் செல்லையா — இல 85, பலாலி வீதி.

★ செல்லையா செல்வநாதன்—இல 54/14 A, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

★ செல்லையா விநாயகமூர்த்தி வீரசிங்கம் — சண்டிலிப்பாய் மத்தி.

★ சண்முகசுந்தரம் செல்வநேசன் — இல 21, சுப்பிரமணியம், அரியாலை.

★ இளையதம்பி சிவசம்பு — மகாத்தனை.

★ பத்மாதேவி பாலசுப்பிரமணியம் — இல 83/9, தஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ யோக்கினா அந்தோனிப்பிள்ளை — 5ஆம் வட்டாரம், ஊர்காவற்றுறை கிழக்கு.

★ ஜோசப்பீனா நிக்ளஸ் — 5ஆம் வட்டாரம், ஊர்காவற்றுறை கிழக்கு,

★ சடையர் சின்னத்துரை — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு.

★ தம்பிப்பிள்ளை பாலசிங்கம் — சிவன் கோவிலடி, வட்டு. மேற்கு.

★ வி. ராஜேந்திரம் — சுன்னாகம் தெற்கு.

★ நாகேஸ்வரி சிதம்பரநாதன்—இல. 62/15, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை.

★ உதயமலர் சிறி தவராசா அல்லது விசுவலிங்கம் திருநாவுக்கரசு — அராலி வடக்கு.

★ சிவராணி சிவசுப்பிரமணியம் — 'கிழக்கு வாசல்', இடைக்காடு.

★ சின்னக்கிளி பிரான்சிஸ் — இல. 1/1, பீச் றோட், பாசையூர்.

★ ஞானப்பிரகாசம் மரியநாயகம் — முதலாம் குறுக்குத் தெரு, பாசையூர்.

★ சண்முகராசா செல்வராசா — அராலி தெற்கு.

★ அற்புதமலர் பாலச்சந்திரன் — முருகமூர்த்தி வித்தியாசாலை ஒழுங்கை, அராலி தெற்கு.

★ பத்மாவதி செல்வலிங்கம் — புதுத் தோட்டம், தெல்லிப்பழை.

★ சின்னத்தம்பி கந்தசாமி — இல. 82/7, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம்.

★ பூமணி மாணிக்கம்—இல. 82/9, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம்.

★ இளையதம்பி நடனமூர்த்தி — மே/பா. ச. கனகரட்ணம், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி

★ தேவதாசன் மதிவாணன் — இல. 79, ஆனந்தம் வடலி வீதி, கொழும்புத்துறை.

★ ரட்ணபாக்கியம் மார்க்கண்டு — பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.

★ கமலராணி யோகராசா — அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கு.

★ ஆறுமுகம் சிவலோகநாதன் — கரந்தன் றோட், நீர்வேலி.

★ பத்மசோதி ஜெயராசா — நீர்வேலி வடக்கு.

★ கண்மணி குழந்தைவேலு அல்லது மகேஸ்வரி தெய்வேந்திரம் — இல 109, கொழும்புத்துறை வீதி.

★ தம்பிப்பிள்ளை ஐயாத்துரை — இல. 18, 1ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ நித்தியலக்ஷ்மி விஜியரமணன் — மே/பா சிறிக்குமார் (A.I.B.) மீசாலை தெற்கு.

★ விஜயலக்சுமி கனகரட்னம் — மீசாலை வடக்கு.

★ ஆறுமுகம் மகாலிங்கம் அல்லது சிவகாமசுந்தரி மகாலிங்கம் — மீசாலை மேற்கு.

★ யோகராசா குருக்கள் -- 9ஆம் வட்டாரம், பள்ளம்புலம், சரவணை கிழக்கு.

★ தங்கம்மா பொன்னுத்துரை -- தாவடிச் சந்தி.

★ மனுவேல் ஞானப்பிரகாசம் — சென். பீற்றர் வீதி, நவாலி தெற்கு.

★ சின்னத்தம்பி மகாலிங்கம் — ராஜவீதி, கோப்பாய் தெற்கு.

★ எட்னாறஞ்சினி சிங்கராயர் — மே/பா N. துரைசிங்கம், இல. 08, சிவப்பிரகாசம் வீதி, சிவம் கராஜ்.

★ முத்துகிருஷ்ணன் கந்தையா -- நீர்வேலி, கரந்தன்.

★ ரேவதி வேதாரணியம் — அச்சுவேலி வடக்கு.

★ கிருபாராணி சயனொளிபவன்—1ம் குறுக்குதெரு, கொழும்புத்துறை.

★ பெரியதம்பி தம்பிராசா — காளிகோவிலடி, பத்தைமேனி, அச்சுவேலி.

★ இரத்தினம் பத்மநாதன் — (AO) அலுவலகம், யாழ்வைத்தியசாலை ஊழியர்.

★ கார்த்திகேசு இராசதுரை அல்லது இன்பராணி கார்த்திகேசு — நிச்சாமம், சங்கானை.

★ முத்தையா கனகலிங்கம்—நிச்சாமம், சங்கானை.

★ வேலுப்பிள்ளை நடராஜா (கந்தசாமி) — 15A, சேர் பொன் ராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

★ தங்கம்மா ஆறுமுகம் — பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

★ தங்கம்மா கந்தையா — புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் உள்ள லொட்ஜுகள் அடுத்த வார இறுதிக்குள் மூடப்படும்

கொழும்பு, பெப். 28

கொழும்பிலும், கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளிலும் உள்ள ''லொட்ஜுகள்'' அடுத்த வாரம் இறுதிக்குள் மூடப்பட உள்ளன.

இந்த லொட்ஜுகளின் தங்கி உள்ளோரை கொழும்புக்கு வெளியே அனுப்புவதற்கு பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர்கள் தங்கும் சுமார் 500 லொட்ஜுகள் உள்ளன.

லொட்ஜுகளை மூடும் நடவடிக்கை கொழும்பு புறக் கோட்டைப் பகுதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி. எம். ரீ.எம். திஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

லொட்ஜுகளை மூடிய பின்னர், முழுக் கொழும்பு மக்களையும் சோதனை செய்து, கொழும்பில் ஊடுருவி உள்ள பயங்கரவாத சந்தேக நபர்களைக் கைது செய்ய முடியும் என்றும அவர் தெரிவித்தார்.

மக்களையும், அரசையும், உடமைகளையும், பொருளாதாரத்தையும் பாதுகாப்பதற்காகவே லொட்ஜுகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்தார். (இ-6)

## இருவர் பார்வையிழப்பு

சாவகச்சேரி, பெப். 28

அண்மையில் கிளிவெட்டி குமரபுரத்தில் அப்பாவித் தமிழர் மீதான படையினரின் வெறியாட்டத்தில் கண்ணில் சூடு பட்ட இருவர் பார்வையை இழக்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என திருகோணமலை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## இடமாற்றம்

பூநகரி, பெப். 25

பூநகரி நல்லூர் சாமிப் புலவில் இயங்கிவந்த பூநகரி தபாலகம் ஜெயபுரத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (இ)

## தீர்வு ஏற்கப்படாவிடில் நாடாளுமன்று கலைப்பு

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் அடங்கிய சட்ட ஆவணம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றத் தவறுமானால் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தப்போவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், எதிர்க்கட்சித தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் கடந்த 21ஆம் திகதி அலரிமாளிகையில் சந்தித்து பேசிய சமயம் —

''தீர்வு யோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாது போனால் மாற்று வழி என்ன'' என்று ஜனாதிபதியை ரணில் கேட்டாராம்.

''தீர்வு யோசனைகளை நிறைவேற்ற முடியாது போனால் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்துவேன்'' என்று அப்போது ஜனாதிபதி பதில் அளித்தார் என்று கூறப்படுகிறது. (இ-3-6)

## உறுப்புரிமை நீக்க முயற்சி: சட்ட விரோதமானது

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக தற்போது இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எதிரிவீர பிரேமரத்தினாவின் உறுப்புரிமை இழக்கச் செய்வதற்கு முயற்சி எடுத்தமை சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான இவர் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.

இவர் தனது கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் —

இவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக்க நடவடிக்கை எடுக்குமாறும் — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தலைவர் சிறீமாணி அத்துலத்முதலி பொது மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் டீ. எம். ஜயரத்தினாவைக் கேட்டிருந்தார்.

இதனை ஆட்சேபித்து பிரேமரத்தினா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். (இ-3-6)

## அரசின் சட்ட ஆவணம் குறித்து சகல கட்சிகளுடனும் கூட்டணி பேச்சுவார்த்தை

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் அடங்கிய அரசின் சட்ட ஆவணம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதியுடனும், எதிர்க் கட்சித் தலைவருடனும் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையிலான குழு என்று நேற்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவிருந்தது.

நாளை ஜனாதிபதி சந்திரிகாவை இக்குழு சந்தித்துப் பேச்சு நடத்தும.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து அரசு பிரதிநிதியான நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மற்றும் ஐ. தே. க. தேசிய ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோருடன் பேச்சு நடத்தி இருந்தது. (இ-3)

## குமரபுரம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

விசாரணை நடத்துவதற்கு மேஜர் ஜெனரல் சமரதுங்க தலைமையிலான இராணுவ விசாரணைக் குழு ஒன்றை இராணுவத் தளபதி நியமித்திருந்தார்.

இந்த விசாரணைக் குழு தனது விசாரணை அறிக்கையை தற்போது இராணுவத் தளபதியிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் —

அந்த அறிக்கையிலேயே படுகொலைக்கு இராணுவத்தினரே முழுப் பொறுப்பு; அவர்களே குற்றவாளிகள் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் —

செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக 33 இராணுவத்தினரை இராணுவப் பொலீஸார் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இவர்களில் எத்தனை பேர் இராணுவ விசாரணை மன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர் என்ற விவரம் நேற்று வெளியாகவில்லை.

படுகொலைகளைப் புரிந்த படையினருக்கும் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத — பொறுப்பான— அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து உரிய தண்டணை வழங்கப்பட வேண்டும் என்று விசாரணை மன்றம் சிபார்சு செய்துள்ளது.

எனினும் —

இச்சம்பவம் தொடர்பாக 14 பேர் இராணுவ விசாரணை மன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர் என்று ''தினமின'' சிங்களப் பத்திரிகை தெரிவித்தது.

இப்படுகொலைகள் குறித்து இராணுவ விசாரணை மன்றத்துக்குப் புறம்பாக பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

136 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-6-7)

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் வெளிவிவகார துணை அமைச்சர் திரு. ஜோன் எக்லண்ட் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் நடப்பதாயின் ஆரம்பத்தில் இரகசியமாக நடக்கவேண்டும். அப்போதுதான் பேச்சுக்கள் தொடர்ந்து நடப்பதற்கு அனுகூலமாக அமையும். இல்லையேல் பத்திரிகைகள் விடயங்களை மிகைப்படுத்தி அரைவழியில் குழப்பிவிடக் கூடும்— என்றும் திரு. எக்லண்ட் சொன்னார்.

நோர்வேயின் வேர்கன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வி. உருத்திரகுமாரன் பங்குபற்றினார் ஆனால் அரசாங்கத் தரப்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகள் பங்குபற்றாத எந்த அரசியல் தீர்வும் நிலையானதாக இருக்க முடியாது என்று முக்கிய பேச்சாளர்களில் ஒருவர் கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைக் காரணம் பற்றி பலர் தமது கருத்துக்களைக் கூறினார்கள். இதன் மூலம் இனப் பிரச்சினையை ஓரளவு வரையறைப் படுத்தக் கூடியதாக உள்ளது. இவ்வாறு வரையறை செய்வது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் எனக் கருதுகிறேன்.—என்று திரு உருத்திரகுமாரன் பி.பி. ஸி. க்கு கருத்துத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ஐ. தே. க சார்பில் சரத் அமுனுகம, சர்வோதய அமைப்பைச் சேர்ந்த ஜெகான் பெரேரா, கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சந்திரசேகரம், நோர். வேகியன் கென்சர் வேட்டிங் கட்சியைச் சேர்ந்த ஏனஸ்ட் போல் பேர்க் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ-3)

## சமாதானப் பத்துடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கிலவார இதழ் ஒன்றின் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகவல்களை அடுத்து கடல் மற்றும் கடலோரத்தில் ரோந்துமற்றும் கண்காணிப்பு பணிகளை கடற்படையும் பொலீஸாரும் [illegible] யிருப்பதாகவும் [illegible] பட்டுள்ளது.

## 150 குடும்பங்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் செல்வதற்கு இவர்களை இணங்கவைப்பதற்கு அரசுக்குப் பெரும் பாடாகிவிட்டது.

கடந்த சில வாரங்களாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இவர்கள் தங்கியிருந்த முகாமுக்கு வந்து வலிகாமம் திரும்புமாறு இவர்களுக்கு ஆலோசனை கூறி வந்தனர். அத்துடன் இவர்களை இணங்கவைக்கும் முயற்சியில் அரசுக்குச் சார்பான தமிழ்க் கட்சிகள் சிலவும் ஈடுபட்டன.

இவர்களில் ஒருவர் வலிகாமம் திரும்புவதற்குப் பதிலாக கொழும்பு செல்லவே விரும்பினார். வலிகாமத்தில் ஸ்திரமான நிலைமை இல்லை என்று அவர் காரணம் கூறினார்.

அரசினால் புனரமைக்கப்பட்டு வரும் வலிகாமத்துக்கு மீண்டும் செல்வதில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது காட்டுகிறது.

[illegible] செய்தியாளர் மேலும் கூறி உள்ளார். (இ)

## போரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கும் வைபவத்தில் அமைச்சர் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் போரை விரும்பவில்லை; நாடவில்லை. விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையையும் தீர்வையும் நிராகரித்ததாலேயே போரை நடத்த வேண்டியுள்ளது.

அரசியல் தீர்வு ஒன்று இல்லாமல் இராணுவத் தீர்வினால் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கமுடியாது.

இப்போதுள்ள விடுதலைப் புலிகள் தலைவர்களை அழித்தாலும், ஜனநாயக அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் இன்னும் ஐந்து வருடங்களில் பெரும் எண்ணிக்கையான தீவிரவாதிகள் தோன்றிவிடுவர்.

போருக்கு என்ன நடந்தது; அது நிறுத்தப்பட்டுவிட்டதா என்று சிலர் கேட்கிறார்கள். போர் திட்டமிட்ட அடிப்படையில் நடத்தப்படுகிறது. மிகுதி 40 சதவீதத்தையும் வெல்லும் வரை போரை நிறுத்தமாட்டோம். பகிரங்கப்படுத்தியோ சத்தம் போட்டோ போர் நடத்த முடியாது.

போரில் இறந்தவர்கள் பலரின் மரண வீடுகளுக்கு நான் சென்றுள்ளேன். அந்த வீடுகளில் பிரேதப் பெட்டிகளை வைப்பதற்கு கூட ஓர் அறையைக் காணமுடிவதில்லை.

ஏழைமக்களே நாட்டைக் காப்பாற்றுவதற்காகத் தமது உயிரை அர்ப்பணிக்கிறார்கள். சமாதானத் தீர்வை எதிர்ப்பவர்கள் தமது பிள்ளைகளை ஒருபோதும் போர் முனைக்கு அனுப்புவதில்லை.

போருக்காக 1992 ஆம் ஆண்டில் 2,900 கோடி ரூபாவும்; 1993 ஆம் ஆண்டில் 2,600 கோடி ரூபாவும், 1994 இல் 2,900 கோடி ரூபாவும், 1995 இல் 3,300 கோடி ரூபாவும் செலவிடப்பட்டது.

போர் இல்லையெனில் இந்தப் பணத்தை நாட்டை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்தியிருக்க முடியும்— என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமிக்குருக்கள் புவனேஸ்வரிஅம்மா

ஊரெழுவை பிறப்பிடமாகவும் தற்பொழுது முத்துமாரி அம்மன் கோயில் பாலம்பிட்டியில் (மடு) வசித்து வந்தவருமான குமாரசாமிக்குருக்கள் புவனேஸ்வரி அம்மா 24-2-96 அன்று காலமாகி விட்டார் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

தகவல்:
கு.சோமசுந்தர சர்மா (மகன்)
இ:பங்குசசர்மா

(40878)

### கருத்தார் மாணிக்கம்

காலஞ்சென்ற கருத்தாரின் அன்பு மனைவி மாணிக்கம் 27- 02- 96 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் வடிவேலு, தவமணி ஆகியோரின் தாயும், தெய்வேந்திரம் (பிரான்ஸ்), தயாவசீகரன், மனோநந்தினி ஆகியோரின் பேர்த்தியாரும், தம்பிப்பிள்ளை, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-02-96) வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தம்பிப்பிள்ளை (மருமகன்)
பாரதி வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

தற்போதைய முகவரி:
கனகம்புளியடி சந்தி,
சரசாலை.

(40845)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 28-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org